Chenkaantal
*A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal*

Volume - 2, Special Issue - 2, January 2023 E-ISSN: 2583-0481

# Dalit Feminist Representation of Politics in Sukirdharani Poems

**Mrs. V. Ambika**, Assistant Professor in Tamil, Bishop Heber College, Tiruchirappalli-17, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0000-0003-0074-0079
**DOI: 10.5281/zenodo.7549801**

## Abstract

*Poet Sukirdharani has been working against the contemporary violence against Dalit women and for Dalit women to be represented in political power. Different from the common feminist ideology, Dalit has made the ideology of women the subject of his poetry. The word 'Dalit' means 'minors of the soil', 'original inhabitants'. The differences between upper caste women and Dalit women in the context of Indian untouchability gave birth to a 'Dalit feminist politics of representation'. A Dalit woman transcends the generic identity of the woman and is defined within her identity as a Dalit woman. In this context, a Dalit woman has to gain representative political power for herself against caste and patriarchy. Due to the development of science and technology and globalization, the daily life patterns of man have changed. But slums remain slums in villages and urban areas. A Dalit woman raises the question of when these conditions will change, a Dalit woman stands up against the dominant caste, gets representation in political power, destroys the casteist ideologies that are rampant in the society, finds a representative political space as a solution to the ongoing violence against Dalit women, defined by the caste and patriarchal class. Refusal to accept morals, This article is explained to explore Sukirtharani's poems about dialogue against oppression, getting representation in political power and breaking the silence of the general society which is oblivious to the violence against Dalit women.*

**Keywords:** Sukirdharani Poems, Feminism, Dalit, Dalit Feminism, Representational Politics.

**References**

[1] Panjangam, K. *Elakkiyamum Theranaivuk Kotpadugalum*, Annam Publications, 2016.
[2] Marks, A. *Pin Naveena Nilai: Elakkiyam Arasiysal Thesiyam*, Pulam Publications, Chennai, First Edition- 2010.
[3] Natarajan T.S. *ThiranaivukKalaiKolkaigalumAnugumuraigalum*, Published by New Century Book House Pvt. Ltd., Chennai, Thirteenth Edition-2020.
[4] Sukirtharani. *Ippa Tikkueevaal.* Published by Kalachuvadu Publications Pvt.Ltd., Nagercoil, Third Edition-2017.
[5] Sukirtharani. I*ravumirukam.* Published by Kalachuvadu Publications Pvt.Ltd., Nagercoil, Fourth Edition-2010.
[6] Sukirtharani. *AvaLaimozipeyarttal.* Published by Kalachuvadu Publications Pvt.Ltd., Nagercoil, Third Edition-2012.
[7] Sukirtharani. *TiiNTappa Taatamuttam*, Published by Kalachuvadu Publications Pvt.Ltd., Nagercoil, Second Edition-2012.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

செங்காந்தள்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் தமிழ் ஆய்விதழ்



மலர் - 2, சிறப்பிதழ் - 2, தை 2054 இ - ஐஎஸ்எஸ்எண்: 2583-0481

# சுகிர்தராணியின் கவிதைகளில் தலித் பெண்ணிய பிரதிநிதித்துவ அரசியல்

**திருமதி வெ. அம்பிகா,** உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை,
பிஷப் ஹீபர் கல்லூரி, திருச்சிராப்பள்ளி -17, தமிழ் நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0000-0003-0074-0079**
**DOI: 10.5281/zenodo.7549801**

**ஆய்வுச்சுருக்கம்**

*சமகாலத்தில் தலித் பெண் மீது நிகழ்த்தப்படுகின்ற வன்முறைகளுக்கு எதிராகவும் தலித் பெண்களும் அரசியல் அதிகாரத்தில் பிரதிநிதித்துவம் பெற வேண்டுமெனவும் தொடர்ந்து இயங்கி வருபவராக கவிஞர் சுகிர்தராணி திகழ்கின்றார். பொதுவான பெண்ணிய கருத்தியலிலிருந்து வேறுபட்டு தலித் பெண் சார்ந்தக் கருத்தியலை தமது கவிதைகளில் பாடுபொருளாக்கியுள்ளார். 'தலித்' எனும் சொல் 'மண்ணின் மைந்தர்கள்', 'பூர்வக் குடிகள்', என்று பொருள் கொள்ளப்படுகிறது. மேலும், சமூகத்தில் கல்வி, வேலைவாய்ப்பு, வாழ்வாதாரம், நிலம், அதிகாரம் போன்ற அடிப்படை உரிமைகள் பறிக்கப்பட்டுச் சிதறடிக்கப்பட்டுகின்றவர்கள் அனைவருமே 'தலித்துக்கள்' என அறியப்படுகின்றனர். அந்தவகையில் ஒடுக்கப்பட்டவர்கள், நொறுக்கப்பட்டவர்கள், வஞ்சிக்கப்பட்டவர்கள் முதலியவர்களும் 'தலித்துக்கள்' எனப்படுகின்றனர். 'தலித்' என்ற சொல் இழிசொல் அல்ல. மாறாக, மொழி ஆதிக்கம் செய்யுமிடத்து 'தமிழன் தலித்' ஆகின்றான். சாதி ஆதிக்கம் பெறுமிடத்து தீண்டாமைக்குட்பட்ட மக்கள் தலித்துக்கள் ஆகின்றனர். ஆரியர்கள் ஆதிக்கம் செலுத்துமிடத்து திராவிடர்கள் தலித்துக்கள் ஆகின்றனர். பாலின ஆதிக்கம் நிகழுமிடத்து பெண்கள் தலித்துக்கள் ஆகின்றனர். இவ்வாறு 'தலித்' எனும்; சொல்லானது விரிந்தப் பொருள்களை கொண்டுள்ளது எனலாம். இந்திய தீண்டாமைச் சூழலில் உயர்சாதிப் பெண்களுக்கும் தலித் பெண்களுக்கும் இடையிலான வேறுபாடுகள் என்பது 'தலித் பெண்ணிய பிரதிநிதித்துவ அரசியலுக்கு' வித்திட்டுள்ளது. ஒரு தலித் பெண், பெண் என்ற பொது அடையாளத்தையும் கடந்து அவளொரு தலித் பெண் என்ற அடையாளத்திற்குள் வரையறுக்கப்படுகின்றாள். இந்நிலையில், ஒரு தலித் பெண் சாதிக்கு எதிராகவும் ஆணாதிக்கத்திற்கு எதிராகவும் தனக்கான பிரதிநிதித்துவ அரசியல் அதிகாரத்தைப் பெற வேண்டியுள்ளது. இந்த நிலைமைகள் எப்பொழுது மாறும் என ஒரு தலித் பெண் வினாவை எழுப்புதல், ஆதிக்கச் சாதிக்கு எதிராக ஒரு தலித் பெண் சாதியை பளிச்சென்று அறிவித்தல், அரசியல் அதிகாரத்தில் பிரதிநிதித்துவம் பெறுதல், சமூகத்தில் புரையோடி போயிருக்கின்ற சாதியக் கருத்தியல்களை தகர்த்தல், தலித் பெண் மீது தொடர்ந்து நிகழ்த்தப்படும் வன்முறைகளுக்கு தீர்வாக பிரதிநிதித்துவ அரசியல் களம் காணுதல், சாதிய, ஆணாதிக்க வர்க்கத்தினரால் வரையறுக்கப்பட்டுள்ள ஒழுக்கங்களை ஏற்க மறுத்தல், ஒடுக்குமுறைக்கு எதிராக உரையாடல் வழி அரசியல் அதிகாரத்தில் பிரதிநிதித்துவம் பெறுதல், தலித் பெண் மீதான வன்முறை குறித்து கண்டும் காணாது இருக்கின்ற பொது சமூகத்தின் மௌனத்தை*

*கலைத்தல் ஆகியனவற்றை குறித்து சுகிர்தராணியின் கவிதைகளில் ஆராய்வதாக இக்கட்டுரை விளக்கப்பட்டுள்ளது.*

**குறிப்புச் சொற்கள்:** சுகிர்தராணி கவிதைகள், பெண்ணியம், தலித், தலித் பெண்ணியம், பிரதிநிதித்துவ அரசியல்

**முன்னுரை**

பெண்ணியம் என்பதை ஒட்டுமொத்த பெண்களின் சமத்துவத்திற்கான கருத்தியலாக ஏற்க இயலாது என தலித் பெண்ணியச் சொல்லாடலை வளர்த்தெடுத்தவர்களில் குறிப்பிடத்தக்கவர் கவிஞர் சுகிர்தராணி ஆவார். இவர் வேலூர் மாவட்டம் லாலாபேட்டையை சேர்ந்தவர். பள்ளியில் தமிழாசிரியராகப் பணிபுரிகின்றார். இவரது கவிதைகள் கைப்பற்றி என் கனவுகோல் (2002), இரவு மிருகம் (2004), அவளை மொழிபெயர்த்தல் (2006), தீண்டப்படாத முத்தம் (2010), காமத்திப்பூ (2012), இப்படிக்கு ஏவாள் (2016) முதலிய ஆறு தொகுப்புகளாக வெளிவந்துள்ளன. சுகிர்தராணியின் பெரும்பாலான கவிதைகள் சமகாலத் தலித் பெண்ணின் பிரதிநிதித்துவ அரசியலை பேசுவதாக அமைந்துள்ளன. அந்தவகையில் சுகிர்தராணியின் கவிதைகளில் வெளிப்படுகின்ற தலித் பெண்ணின் பிரதிநிதித்துவ அரசியலை வெளிக்கொணருவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**தலித் - வரையறை**

தலித் என்ற சொல்லுக்கு ‘மண்ணின் மைந்தர்கள்’, ‘பூர்வக்குடிகள்’ என்று பொருள் கொள்ளப்படுகிறது. சமூகத்தில் கல்வி, வேலைவாய்ப்பு, வாழ்வாதாரம், நிலம், அதிகாரம் போன்ற அடிப்படை உரிமைகளைப் பறித்து சிதறடிக்கப்பட்டவர்கள் அனைவரும் ‘தலித்துக்கள்’ என்று அறியப்படுகின்றனர். ஒடுக்கப்பட்டவர்கள், நொறுக்கப்பட்டவர்கள், வஞ்சிக்கப்பட்டவர்கள் முதலியவர்களும் ‘தலித்துக்கள்’ எனப்படுகின்றனர். ‘தலித்’ எனும் சொல்லானது இழிவுச்சொல் அல்ல. மொழி ஆதிக்கம் செலுத்துமிடத்து தமிழன் தலித் ஆகின்றான். சாதி ஆதிக்கம் பெறுமிடத்து தீண்டாமைக்குட்பட்ட மக்கள் தலித்துகள் ஆகின்றனர். ஆரியர்கள் ஆதிக்கம் செய்யுமிடத்து திராவிடர்கள், பாலின ஆதிக்கம் நிகழுமிடத்து பெண்கள் தலித்துகள் ஆகின்றனர். இவ்வாறு சாதி, மதம், இனம், மொழி, கல்வி, வேலைவாய்ப்பு, பொருளாதாரம் சார்ந்து மக்கள் பாதிக்கப்படுதல், வஞ்சிக்கப்படுதல் போன்ற நிலைமைகளை குறிப்பதற்கு ‘தலித்’ என்ற சொல்லானது விரிந்தப் பொருளில் பார்க்க வேண்டியுள்ளது.

**தலித் பெண்ணிய பிரதிநிதித்துவ அரசியல் குறித்த அடிப்படை புரிதல்**

அமெரிக்க அடிமைச் சூழலில் வெள்ளை இனப் பெண்களுக்கும் கருப்பினப் பெண்களுக்கும் இடையிலான வேறுபாடுகள் என்பதும் இந்திய தீண்டாமைச் சூழலில் உயர்சாதிப் பெண்களுக்கும் தலித் பெண்களுக்கும் இடையிலான வேறுபாடுகள் என்பதும் ‘தலித்’ பெண்ணிய கருத்துருவாக்கத்திற்கு வித்திட்டுள்ளது. பொதுவான

பெண்ணியத்திலிருந்து தலித் பெண்ணிய பிரதிநிதித்துவ அரசியல் வேறுபடுகிறது. தலித் பெண் ஏன் பிரதிநித்துவ அரசியலை முன்னெடுக்க வேண்டும் என்பதை

> **இந்தியச் சமூகம் சாதிகளால் கட்டமைக்கப்படுவது. எனவே பெண்ணியம் பேசும் போது எல்லாச் சாதிக்கும் பொதுவான பெண்ணியம் என ஒன்றைக் குறித்துப் பேசமுடியாத நிலைமை ஏற்படுகிறது. தமிழ்ச் சமூகத்தில் ஒரு தலித் பெண்ணும் ஒரு பிராமணப் பெண்ணும் ஒரே தரத்தில் உணரப்படுவதில்லை என்பது யதார்த்தம். ஒரு பிராமணப் பெண், ஆணால் மட்டுமே ஒடுக்குமுறைக்கு உள்ளாகிறாள். ஆனால் ஒரு தலித் பெண் ஆணால் மட்டுமல்ல, உயர் சாதிக்காரர்களாலும் ஒடுக்கப்படுகின்றார்கள். *(க.பஞ்சாங்கம், 2016:240)***

க.பஞ்சாங்கத்தின் இக்கருத்து தெளிவுப்படுத்துகிறது.

> **தலித் பெண்ணியம் தனக்கு அணுக்கமாக வைதீக இந்(து)திய மரபை எடுத்துக்கொள்ளாது. பவுத்த, சமண, அவைதீக மதிப்பீடுகள், பூலே, பெரியார், அம்பேத்கார் என்றொரு பாரம்பரியத்தை வரித்துக்கொள்ளும். இந்த மரபில் நின்று இந்(து)தியச் சமூகத்தை வெறும் ஆணாதிக்கச் சமூகமாகக் காணாமல் உயர்சாதி ஆணாதிக்கச் சமூகமாகக் காணும். *(அ.மார்க்ஸ், 2010:193)***

அ.மார்க்ஸின் இக்கூற்று தலித் பெண்ணிய பிரதிநிதித்துவ அரசியல் புரிதலை தருகிறது. ஒரு தலித் பெண், பெண் என்ற பொது அடையாளத்தை விட அவளொரு ‘தலித் பெண்’ என்ற அடையாளத்திற்குள் கட்டமைக்கப்பட்டிருக்கின்றாள். பொதுவாக, பெண்களுக்கு ஏற்படுகின்ற சிக்கல்களை விட அவளொரு தலித் பெண் என்ற அடையாளம் அவளை மேன்மேலும் சிக்கலுக்குட்படுத்துகின்றன. இவ்வாறு பொதுவான பெண்களுக்கு ஏற்படுகின்ற பிரச்சனைகளிலிருந்து தலித் பெண்ணின் பிரச்சினைகள் கவனத்தைப் பெறுகின்றன. மேலும்,

> **பெண்ணடிமைத்தனம் என்பது பொதுவானதாக இருந்தாலும், அதனுள்ளும், தலித் இனத்துப் பெண்கள் என்று இவர்களுக்குப் பெண் என்ற முறையிலும் இனம் என்ற முறையிலும் உள்ள இரட்டை அடிமைத்தனமும், தனியாக கவனத்திலெடுத்துக் கொள்ளப்பட வேண்டும். மேலும், உடல் ரீதியாக உழைக்கும் பெண், படிப்பறிவில்லாத பெண், சேரிப் பெண், கிராமத்துப் பெண் என்ற பிரத்தியேக நிலைகளும் கவனத்திலெடுத்துக் கொள்ளப்பட வேண்டும். *(தி.சு.நடராசன், 2020:158)***

என்ற தி.சு.நடராசனின் கருத்தென்பது பொதுவான பெண்ணிய அரசியலிலிருந்து தலித் பெண்ணிய பிரதிநிதித்துவ அரசியல் வேறுபட்டதென்பதை தெளிவுப்படுத்துகிறது.

**தலித் பெண்ணிய பிரதிநிதித்துவ அரசியல் களம் காணுதல்**

இந்தியாவில் குறிப்பாக, தமிழ்ச் சமூகத்தில் தலித் பெண்ணின் பிரதிநிதித்துவ அரசியல் என்பது பொதுவான பெண்ணிய அரசியலிலிருந்து வேறுபடுகின்றது. தலித் பெண் என்பதாலே சாதிய ஆதிக்கச் சமூகத்தில் எவ்வாறெல்லாம் இடர்பாடுகளை எதிர்கொள்கின்றாள் என்பதனை,

**செத்துபோன மாட்டைத் தோலுரிக்கும்போது காகம் விரட்டுவேன்**
**வெகுநேரம் நின்று வாங்கிய ஊர்ச்சோற்றைத் தின்றுவிட்டு**
**சுடுசோறெனப் பெருமைபேசுவேன். தப்பட்டை மாட்டிய அப்பா**
**தெருவில் எதிர்ப்படும்போது முகம் மறைத்து கடந்துவிடுவேன்**
**அப்பாவின் தொழிலும் ஆண்டுவருமானமும் சொல்ல முடியாமல்**
**வாத்தியாரிடம் அடிவாங்குவேன். தோழிகளற்ற பின்வரிசையி லமர்ந்து**
**தெரியாமல் அழுவேன். இப்போது யாரேனும் கேட்க நேர்ந்தால்**
**பளிச்சென்று சொல்லிவிடுகிறேன் பறச்சி என்று.** (***சுகிர்தராணி***, *2010:32)*

குறிப்பிடுகின்றார் சுகிர்தராணி. ஒரு தலித் பெண், அன்றாட வாழ்க்கையில் தொடர்ந்து சாதிய வன்முறைகளை எதிர்கொண்டே வாழ நிர்பந்திக்கப்பட்டிருக்கின்றாள். ஒரு கட்டத்தில் சாதிய ஆதிக்கத்திற்கு எதிராக சாதியை பளிச்சென்று அறிவிக்கின்ற துணிவைப் பெற்றிருப்பதை சுகிர்தராணியின் இக்கவிதை வெளிப்படுத்துகின்றது இது தலித் பெண்ணின் பிரதிநிதித்துவ அரசியல் அதிகாரத்தை நோக்கிய நகர்வாகவே அறியமுடிகிறது.

ஆதிக்கச் சாதியர்கள் வாழ்கின்ற இடம் ஊர் என்றும் தலித்துகள் வாழ்கின்ற இடம் ஊரின் புறத்தே உள்ள சேரி என்றும் பிரிக்கப்பட்டிருக்கிறது. இன்னும் எத்தனை நூற்றாண்டுகள் சேரி சேரியாகவே இருக்கும். சேரி ஊராக மாறாதா? என்று ஒரு தலித் பெண் தனது தந்தையிடம் வினவுகின்றாள். இதேபோன்று தலித் குழந்தை தனது தாயிடம் அதே வினாவை எழுப்புகின்றது இவ்வாறாக தலித்துகள் தங்களுக்குள் பல நூற்றாண்டுகளாக விடைகாணாத நிலையில் உழன்று கொண்டிருப்பதைக் கவிஞர் சுகிர்தராணி,

**தலைசாய்த்து நீரருந்தும் சிறு பட்சியைப்போல**
**வீட்டின் முற்றத்தில் அமர்ந்திருந்த அப்பாவிடம் கேட்கிறேன்**
**உடலின் குப்பியில் விசத்தை இட்டாற்போல வலி பெருகுகிறது**
**உள்ளங்கையை முறமாக்கி சலித்தெடுத்த**
**காலந்தொட்டே கேட்டுக்கொண்டிருக்கிறேன்**
**பதில் சொல்வாரில்லை வலி பிசகாமல் அவரும் அவரப்பாவிடம் கேட்டது**
**நினைவிலாடும் போலிருக்கிறது அப்பாவும் அழுகிறார் நானும் அழுகிறேன்**
**இதயத்தின் ஒற்றைக் கப்பியில் கட்டப்பட்ட கேள்வியின் ஊஞ்சல்**
**காலத்தின் இருபுறமும் சென்று வருகிறது பதிலின்றி பதில்சொல்வார் எவருமின்றி**
**சற்று தொலைவில் சொப்பு வைத்து தனியே விளையாடும் என் மகள்**
**உதட்டின் விளிம்புக்குள் துக்கத்தை மடித்து அதே கேள்வியைக் கேட்கிறாள் என்னிடம்**
**சேரி ஊராகாதா அம்மா? (சுகிர்தராணி, 2017:20)**

என்று பதிவு செய்கின்றார். தமிழ்ச் சமூகத்தில், சாதிய ஆதிக்கச் சமூகக் கட்டமைப்பு சார்ந்தக் கருத்தியல்கள் இருகிக் கெட்டித்தட்டிப் போயிருக்கிறது. இவற்றை மாற்றியமைப்பது என்பது எளிதான காரியமன்று. எனவே கவிஞர் சுகிர்தராணி தனது எழுத்தின் மூலம் தலித்துகள்

குறிப்பாக, தலித் பெண் அரசியல் அதிகாரத்தில் பிரதிநிதித்துவம் பெற வேண்டுமென்பதை சுட்டிக்காட்டுவதை அறியமுடிகிறது.

**பறை - கதையாடல்களும் தகர்ப்பும்**

சாதிய ஆதிக்க மனநிலையாளர்கள் இதுவரை தலித் சமூகத்தின் மீது பல்வேறு கதையாடல்களை முன்வைத்து பழித்துக் கூறியும் வந்துள்ளனர் என்பதை,

**சொல்லுகிறீர்கள் முதுகு விரியக் காய்ந்தால் அதன்பெயர் பறவெயில்**
**உலரும் புழுத்த தானியத்தை அலகு கொத்தி விரையும் அது பறக்காகம்**
**கையிலிருப்பதை மணிக்கட்டோடு பறித்துச் சென்றால் அது பறநாய்**
**நிலத்தை உழுது வியர்வை விதைத்தால் அது பறப்பாடு**
**சகலத்திற்கும் இப்படியே பெயர் என்றால் இரத்தவெறியில் திளைக்கும்**
**எது அந்தப் பறக்கடவுள். (*சுகிர்தராணி,* 2010:33)**

என்ற வினாவை சுகிர்தராணி எழுப்புகின்றார். சாதிய ஆதிக்கச் சமூகம் இதுவரை தலித் சமூகத்தின் மீது கூறி வந்துள்ள கதையாடல்களை தகர்ப்பிற்கு உட்படுத்துவதாக இக்கவிதை அமைந்துள்ளது. மேலும், தலித் பெண்ணிய தனக்கான பிரதிநிதித்துவ அரசியலை மட்டுமே முன்னெடுக்கவில்லை. தலித் சமூகத்தின் ஒட்டுமொத்த விடுதலைக்கான அரசியல் பிரதிநிதியாக அரசியல் களம் காணப்படுவதையும் அறியமுடிகிறது.

**தலித் பெண் மீதான வன்முறையும் பிரதிநிதித்துவ அரசியல் களமும்**

தலித் சமூகத்தில் குறிப்பாக, தலித் பெண்களின் மீது நிகழ்த்தப்படுகின்ற வன்முறைகள் மிகுந்தும் பெரிதும் கவனம் பெறாத நிலையே காணப்படுகின்றது. இதனை ஆவணப்படுத்துகின்ற வகையில்,

**எங்கள் ஆடைகளை அவிழ்ப்பீர் அம்மணமாக்குவீர் வன்புணர்வீர்**
**தமையனோடு புணரச் சொல்வீர் பிறப்புறுப்பில் துறடு செருகுவீர்**
**முலைகளை அரிவீர் வாய்க்காலில் வீசுவீர் அமிலத்தை ஊற்றுவீர்**
**தலையைத் துண்டிப்பீர் காலை வெட்டுவீர் காணாப் பிணமாக்குவீர்**
**மலத்தை வாயில் திணிப்பீர் மூத்திரத்தைக் குடிக்கச் செய்வீர்**
**சேரியெனப் பிரித்து வைப்பீர் செருப்புமாலை போடுவீர் வேசி என்பீர்**
**பறையன் என்பீர் தீயிட்டுக் கொளுத்துவீர் மரத்தில் தொங்கவிடுவீர்**
**தீண்டாமைச் சுவரெழுப்புவீர் தனிக்குவளை கொடுப்பீர்**
**செருப்பணியத் தடை விதிப்பீர் காதலித்தால் நாடகம் என்பீர்**
**ஆணவக்கொலை செய்வீர் இனி எவையும் மிச்சமில்லை நீங்கள் செய்வதற்கு**
**ஆனால் நான் செய்ய ஒன்றுண்டு அது கொலையும் செய்வாள் பறச்சி.**
***(சுகிர்தராணி, 2017:31)***

என்னுமிடத்து கவிஞர் சுகிர்தராணி, பல நூற்றாண்டுகளாக சாதிய, ஆணாதிக்கத்தின் பிடியில் அடிமைப்பட்டு கிடந்த இனத்தின் கோபமொழியாக வெளிபடுத்தியிருப்பதை அறியமுடிகிறது.

மேலும், ஒரு தலித் பெண் தனக்கான விடுதலையை தான்தான் போராடி பெற வேண்டும் என்ற நிலைக்கு தள்ளப்பட்டிருக்கின்றாள். தனது இனம் விடுதலை பெறுவதற்கு எல்லாவற்றிற்கும் துணிந்தவாளாக எதிர்த்து நிற்கின்ற பண்பே தலித் பெண்ணின் பிரதிநிதித்துவ அரசியலாகப் பார்க்க வேண்டியுள்ளது.

**தலித் பெண் - தன்னை ஒழுக்கங்கெட்டவள் என்று அறிவிக்க சொல்லுவதிலுள்ள பிரதிநிதித்துவ அரசியல்**

ஒரு தலித் பெண் தனியாக வாழ்ந்து வருகின்றாள். ஒரு ஆணையும் விரும்புகின்றாள். குழந்தைகளின் மீது அளவற்ற அன்பு இருந்தாலும் கருத்தரிக்க இயலவில்லை. கூந்தலை வெட்டிக் கொள்கின்றாள். உதட்டின் முத்த ஆசைகளை மறைத்து கொள்கின்றாள். இறந்துபோன தந்தையை பார்க்க விரும்புகின்றாள். சிறுமிகளுக்கு மாலை நேர வகுப்பும் எடுக்கின்றாள். கள்ளக்காதல் செய்பவள் என்ற பழிச்சொல்லுக்கும் ஆளாகின்றாள் என்பதாக குறிப்பிடுகின்ற கவிஞர் சுகிர்தராணி,

**வேண்டுமானால்**
**என்னை ஒழுக்கங்கெட்டவள்**
**என்று சொல்லிக் கொள்ளுங்கள். (சுகிர்தராணி, 2017:70)**

என்னுமிடத்து, ஒரு தலித் பெண் தன் விருப்பப்படி வாழ சாதிய, ஆணாதிக்கச் சமூகம் இடமளிப்பதில்லை என்ற தெளிவைப் பெற்றிருப்பதை அறியமுடிகிறது. மேலும், ஒழுக்கமுள்ள பெண் ஒழுக்கமில்லாத பெண் என்ற வரையறைகள் எவ்வாறு அளவீடு செய்யப்படுகின்றது. இத்தகைய வரையறைகள் குறிப்பாக தலித் பெண்ணிற்கு மட்டுமே முன்வைக்கப்படுகின்றது. சாதிய, ஆணாதிக்க தனிமனிதர்களால் வரையறுக்கப்பட்ட ஒழுக்கங்களை ஏற்றுதான் வாழவேண்டும் என்றால் அத்தகைய ஒழுக்கமே தேவையில்லை என்பது தலித் பெண்ணின் பிரதிநிதித்துவ அரசியலின் பண்பாகாவும் பார்க்க வேண்டியுள்ளது.

**தலித் பெண் - வாழ்வியலும் உரையாடல் வழி அரசியல் பிரதிநிதித்துவம் பெறுதலும்**

தலித்துகளின் வாழ்க்கை முறையென்பது ஒரே படுக்கையறையில் உறக்கம் கலைந்து எழுவர். இசைக்குரிய இலக்கணங்கள் எதுவுமின்றி சிறுபறை கருவியை கொண்டு இசைத்து மகிழ்வர். குறிப்பாக, கர்ப்பினிப் பெண்ணானவள் போதிய ஊட்டச்சத்துமின்றி உடல் மெலிந்து காணப்படுவாள். குழந்தை பிறந்தவுடன் கூட்டமாக ஆவலுடன் எட்டிப்பார்ப்பர். என்று விளக்குகின்ற கவிஞர் சுகிர்தராணி,

**பசியை உண்டு பசியைக் கழிக்கும் வறுமையையும்**
**தீண்டாத காற்றால் தெளிக்கப்பட்ட அவள் இருப்பிடத்தையும்**
**ஒடுக்கப்பட்ட அவள் இனத்தையும் மொழிபெயர்த்துச் சொன்னபோது**
**நான் அவளாகி இருந்தேன். (*சுகிர்தராணி, 2012:34*)**

என்கின்றார். இக்கவிதை, தலித் பெண் சாதிய, ஆணாதிக்க ஒடுக்குமுறைகள் மட்டுமின்றி பசியெனும் கொடிய வறுமை, தீண்டாமை, இனம் சார்ந்தும் ஒடுக்கப்பட்டிருப்பதை

எடுத்துக்காட்டுகிறது. இத்தகைய ஒடுக்குமுறைகளுக்கு எதிராக தலித் பெண் உரையாடல் வழி பிரதிநிதித்துவ அரசியல் அதிகாரத்தை பெற வேண்டியுள்ளது என்பதை கவிஞரின் வழிநின்று அறியமுடிகிறது.

**தலித் பெண்ணிய பிரதிநிதித்துவ அரசியலும் விடுதலை பதாகையும்**

ஒரு தலித் பெண் இரவுநேரத்தில் சாதிய, ஆணாதிக்கர்களின் வன்முறைக்கு ஆட்பட்டிருக்கின்றாள். வீட்டின் முன்புறத்தில் கால்கள் கட்டப்பட்டு நிர்வாணமாக கிடத்தப்பட்டிருக்கின்றாள். உடன் பிறந்தவனையே புணரச் செய்ய சொல்கின்ற வக்கிரக்கார்கள். யோனியில் கம்பை கொண்டு நடுகின்றார்கள், பின்னர் சாதிக் கூத்தை ஆடிக் களைப்படைந்தவர்கள் இறந்த தலித் பெண்ணின் உடலை கால்வாயில் வீசுகின்றனர் என்பதாக விளக்கிச் செல்கின்ற கவிஞர் சுகிர்தராணி,

> **செவிட்டுப் போர்வையிலிருந்தும் குருட்டுத் தூக்கத்திலிருந்தும் விடுபடாத தேசத்தில் சட்டையுரிக்கும் சர்ப்பத்தின் உக்கிரத்தோடு மண்ணுக்குள் புதைகிறேன் யோனியில் ஊன்றிய கம்பின் உச்சியில் குருதியின் நிறத்தோடு பறக்கும் எம் விடுதலையின் பதாகை. *(சுகிர்தராணி, 2012:13)***

என்று குறிப்பிடுகின்றார். தலித் பெண் மீது நிகழ்த்தப்படுகின்ற வன்முறைகளை தடுத்து நிறுத்துவதற்கு எவரும் முன்வருவதில்லை. இத்தகைய வன்முறைகள் காலப்போக்கில் மறைந்து போவதையும் சமூகத்தில் காணமுடிகிறது. இந்நிலையில் தலித் பெண் தனக்கான பிரதிநிதித்துவ அரசியல் அதிகாரத்தை பெற வேண்டியதன் அவசியத்தை கவிஞரின் வழிநின்று அறியமுடிகிறது.

**முடிவுரை**

கவிஞர் சுகிர்தராணி தலித் பெண்களும் அரசியலில் அதிகாரத்தில் பிரதிநிதித்துவம் பெற வேண்டுமென்பதை தமது கவிதைகளில் பாடுபொருளாக்கி இருப்பதை அறியமுடிகிறது. தலித் என்ற சொல் மண்ணின் மைந்தர்கள், பூர்வக்குடிகள் என்ற விரிந்த பொருண்மையினை கொண்டுள்ளது. பெண்ணியம் என்ற பொது அடையாளத்திற்குள் வரையறுக்கப்படாது தலித் பெண்ணிற்கே உரிய தனித்த அடையாளங்களையும் உரிமைகளையும் பெற்றுத் தருவதாக தலித் பெண் பிரதிநிதித்துவ அரசியலை அறியமுடிகிறது. ஆதிக்கச் சாதிக்கு எதிராக ஒரு தலித் பெண் சாதியை பளிச்சென்று அறிவிக்கின்ற துணிவை பெற்றிருக்கின்றாள். அரசியல் அதிகாரத்தில் பிரதிநிதித்துவம் பெறுதல் சமூகத்தில் புரையோடி போயிருக்கின்ற சாதியக் கருத்தியல்களை தகர்த்தல், தலித் பெண் மீது தொடர்ந்து நிகழ்த்தப்படும் வன்முறைகளுக்கு தீர்வாக பிரதிநிதித்துவ அரசியல் களம் காணுதல், சாதிய, ஆணாதிக்கர்களால் வரையறுக்கப்பட்டுள்ள ஒழுக்கங்களை ஏற்க மறுத்தல், ஒடுக்குமுறைக்கு எதிராக உரையாடல் வழி அரசியல் அதிகாரத்தில் பிரதிநிதித்துவம் பெறுதல், தலித் பெண் மீதான வன்முறை குறித்து கண்டும் காணாது இருக்கின்ற பொது சமூகத்தின் மௌனத்தை கலைத்தல் என்பன

 இ - ஐஎஸ்எஸ்எண்: 2583-0481

சமகாலத்தில் தலித் பெண் தனது இனத்தின் விடுதலைக்கான பிரதிநிதித்துவ அரசியலை முன்னெடுத்திருப்பதை சுகிர்தராணியின் கவிதைகளிலிருந்து அறியமுடிகிறது.

**குறிப்புநூல்கள்**

[1] பஞ்சாங்கம், க. *இலக்கியமும் திறனாய்வுக்கோட்பாடுகளும்*, அன்னம்பதிப்பகம், தஞ்சாவூர், இரண்டாம்பதிப்பு, 2016.
[2] மார்க்ஸ், அ. *பின்நவீனநிலை: இலக்கியம் அரசியல் தேசியம்*, புலம் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, 2010.
[3] நடராசன், தி, சு. *திறனாய்வுக்கலை கொள்கைகளும் அணுகுமுறைகளும்*, நியூசெஞ்சுரிபுக் ஹவுஸ் (பி) லிட்.ஈ, சென்னை. பதின்மூன்றாவது பதிப்பு, 2020.
[4] சுகிர்தராணி. *இப்படிக்குஏவாள்*, காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில், மூன்றாம்பதிப்பு-2017.
[5] சுகிர்தராணி. *இரவுமிருகம்*, காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில், நான்கம் பதிப்பு, 2010.
[6] சுகிர்தராணி. *அவளை மொழி பெயர்த்தல்*, காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில், மூன்றாம் பதிப்பு, 2012.
[7] சுகிர்தராணி. *தீண்டப்படாத முத்தம்*, காலச்சுவடுபதிப்பகம், நாகர்கோவில், இரண்டாம் பதிப்பு, 2012.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.